# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06 ஆம் நாள், புதன் கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.**

**நிகழ்ச்சி நிரல்**

**பொருள். 1**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதி 2018-19ன் கீழ், கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 08.01.19 அன்று கோரியதில், (ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 390/2018-19) வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப் புள்ளிகளின் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரை செய்துள்ளதை தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் | |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | **பொதுநிதி 2018-19** | | | |
| 1 | ஸ்ரீரங்கம் கோட்டத்திற்குட் பட்ட வார்டு எண் 18 மேலப்புலிவார்டு சாலையில் நுண்உரக்கிடங்கு கட்டும் பணி<br><br>மதிப்பீடு ரூ.71.90 லட்சம் | எம்.பொன்னுசாமி, திருச்சி<br><br>கே.ஜெயராமன், திருச்சி | 0.11% குறைவு<br><br>0.74% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.எம்.பொன்னு சாமி திருச்சி** அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.11 சதவீதம் குறைவான விலை விகிதத்தில் கொடுத்துள்ளதனை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத் துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் 5ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**[இ3/11397/2018]**

**தீர்மானம் எண்.40 (பொருள்–1) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 2**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில், கீழ்கண்டுள்ள பணியினை கல்விநிதி 2018–19ன் கீழ் மேற்கொள்ள, தனிஅலுவலர் அவர்களது தீர்மானம் எண்.416 நாள்.30.11.2018ல் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் அடிப்படையில், ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.360/2018–19ன் வாயிலாக 28.12.2018 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்துபுள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் (திருவாளர்கள்) | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| | **கல்விநிதி 2018–19** | | |
| 1 | ஸ்ரீரங்கம் கோட்டம், வார்டு எண்.2, கிழக்கு சித்திரை வீதி டாக்டர். ராஜன் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் பழுதடைந்துள்ள கட்டிடங்களை இடித்து விட்டு புதிய நவீன முறையில் உட்கட்டமைப்பு மற்றும் நவீனமயமாக்கல் பணி மேற்கொள்ளுதல்.<br><br>மதிப்பீடு ரூ.72.50 லட்சம் | **1. பி.சங்கர், 0.19 % குறைவு.**<br><br>2. பி. ரவி, 1.98 % அதிகம். | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. பி. சங்கர், ஒப்பந்தக்காரர் அவர்கள் வழங்கியுள்ள மதிப்பீட்டைக் காட்டிலும் 0.19% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகளை பத்தி எண்.4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஏற்கலாம்.

**(கோப்பு எண்.இ1/10666/2018(மை))**

**தீர்மானம் எண்.41 (பொருள்–2 ) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ.அபிஷேகபுரம் கோட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை முதல் நிலை சேகரிப்புப் பணியில் அந்தந்த வார்டுகளில் உள்ள வீடுகளில் சேகரமாகும் திடக்கழிவுளை 2.0க.மீ கொள்ளளவுள்ள டிப்பர் இலகுரக வாகனங்கள் மூலம் வாங்கப்பட்டு மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் என அந்தந்த வார்டு பகுதிகளில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பிரித்து நுண்ணுயிர் உரக்கூடங்களில் மக்கும் குப்பைகளை உரமாக தயார் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

அதன்படி மேற்கண்ட நுண்ணுயிர் உரக்கூடங்களுக்கு அந்தந்த வார்டு பகுதிகளில் உள்ள வீடுகளில் இருந்து உற்பத்தியாகும் திடக்கழிவுகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்கி கொண்டு சேர்க்கும் பணியில் கோ.அபிஷேகபுரம் கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வரும் 49 எண்ணிக்கை 2 க.மீ கொள்ளளவுள்ள இலகுரக டிப்பர் வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 49 ஓட்டுநர்களை 01.04.2019 முதல் 25.03.2020 வரை 360 நாட்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறையில் தெரிவிக்கப்பட்டுள்ள விலை விகிதத்தில், மதிப்பீடு ரூ.99.48 லட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி வெளியாட்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்திக் கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்கண்ட பணிக்காகும் உத்தேச செலவினம் ரூ.99.48 லட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை 2019–20ம் ஆண்டு வரவு மற்றும் செலவினங்கள் கணக்கு தலைப்பு எண்: (2105/1) திடக்கழிவு மேலாண்மை பராமரிப்புப் பணிகள்- மனித ஆற்றல் உள்பட கணக்கு தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்படவுள்ள தொகையிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ5/179/2019(மையம்)**

**தீர்மானம் எண்.42 (பொருள்–3 ) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 4**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை முதல் நிலை சேகரிப்புப் பணியில் அந்தந்த வார்டுகளில் உள்ள வீடுகளில் சேகரமாகும் திடக்கழிவுளை 2.0க.மீ கொள்ளளவுள்ள டிப்பர் இலகுரக வாகனங்கள் மூலம் வாங்கப்பட்டு மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் என அந்தந்த வார்டு பகுதிகளில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பிரித்து நுண்ணுயிர் உரக்கூடங்களில் மக்கும் குப்பைகளை உரமாக தயார் செய்யும் பணி நடைபெற்றுவருகிறது.

அதன்படி மேற்கண்ட நுண்ணுயிர் உரக்கூடங்களுக்கு அந்தந்த வார்டு பகுதிகளில் உள்ள வீடுகளில் இருந்து உற்பத்தியாகும் திடக்கழிவுகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்கி கொண்டு சேர்க்கும் பணியில் ஸ்ரீரங்கம் கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வரும் 31 எண்ணிக்கை 2 க.மீ கொள்ளளவுள்ள இலகுரக டிப்பர் வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 31 ஓட்டுநர்களை 01.04.2019 முதல் 31.03.2020 வரை 366 நாட்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறையில் தெரிவிக்கப்பட்டுள்ள விலை விகிதத்தில், மதிப்பீடு ரூ.63.99 லட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி வெளியாட்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்திக் கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்கண்ட பணிக்காகும் உத்தேச செலவினம் ரூ.63.99 லட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை 2019–20ம் ஆண்டு வரவு மற்றும் செலவினங்கள் கணக்கு தலைப்பு எண்: (2105/1) திடக்கழிவு மேலாண்மை பராமரிப்புப் பணிகள்- மனித ஆற்றல் உள்பட கணக்கு தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்படவுள்ள தொகையிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ5/180/2019(மையம்)**

**தீர்மானம் எண்.43 (பொருள்–4 ) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 5**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை முதல் நிலை சேகரிப்புப் பணியில் அந்தந்த வார்டுகளில் உள்ள வீடுகளில் சேகரமாகும் திடக்கழிவுளை 2.0க.மீ கொள்ளளவுள்ள டிப்பர் இலகுரக வாகனங்கள் மூலம் வாங்கப்பட்டு மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் என அந்தந்த வார்டு பகுதிகளில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான

இடத்தில் பிரித்து நுண்ணுயிர் உரக்கூடங்களில் மக்கும் குப்பைகளை உரமாக தயார் செய்யும் பணி நடைபெற்றுவருகிறது.

அதன்படி மேற்கண்ட நுண்ணுயிர் உரக்கூடங்களுக்கு அந்தந்த வார்டு பகுதிகளில் உள்ள வீடுகளில் இருந்து உற்பத்தியாகும் திடக்கழிவுகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்கி கொண்டு சேர்க்கும் பணியில் அரியமங்கலம் கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வரும் 45 எண்ணிக்கை 2 க.மீ கொள்ளளவுள்ள இலகுரக டிப்பர் வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 45 ஓட்டுநர்களை 01.04.2019 முதல் 31.03.2020 வரை 366 நாட்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறையில் தெரிவிக்கப்பட்டுள்ள விலை விகிதத்தில், மதிப்பீடு ரூ.92.88 லட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி வெளியாட்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்திக் கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்கண்ட பணிக்காகும் உத்தேச செலவினம் ரூ.92.88 லட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை 2019–20ம் ஆண்டு வரவு மற்றும் செலவினங்கள் கணக்கு தலைப்பு எண்: (2105/1) திடக்கழிவு மேலாண்மை பராமரிப்புப் பணிகள்- மனித ஆற்றல் உள்பட கணக்கு தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்படவுள்ள தொகையிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ5/181/2019(மையம்)**

**தீர்மானம் எண்.44 (பொருள்–5 ) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 6**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலை கோட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை முதல் நிலை சேகரிப்புப் பணியில் அந்தந்த வார்டுகளில் உள்ள வீடுகளில் சேகரமாகும் திடக்கழிவுளை 2.0க.மீ கொள்ளளவுள்ள டிப்பர் இலகுரக வாகனங்கள் மூலம் வாங்கப்பட்டு மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் என அந்தந்த வார்டு பகுதிகளில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பிரித்து நுண்ணுயிர் உரக்கூடங்களில் மக்கும் குப்பைகளை உரமாக தயார் செய்யும் பணி நடைபெற்றுவருகிறது.

அதன்படி மேற்கண்ட நுண்ணுயிர் உரக்கூடங்களுக்கு அந்தந்த வார்டு பகுதிகளில் உள்ள வீடுகளில் இருந்து உற்பத்தியாகும் திடக்கழிவுகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்கி கொண்டு சேர்க்கும் பணியில் பொன்மலை கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வரும் 45 எண்ணிக்கை 2 க.மீ கொள்ளளவுள்ள இலகுரக டிப்பர் வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 45 ஓட்டுநர்களை 01.04.2019 முதல் 31.03.2020 வரை 366 நாட்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறையில் தெரிவிக்கப்பட்டுள்ள விலை விகிதத்தில், மதிப்பீடு ரூ.92.88 லட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி வெளியாட்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்திக் கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்கண்ட பணிக்காகும் உத்தேச செலவினம் ரூ.92.88 லட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை 2019–20ம் ஆண்டு வரவு மற்றும் செலவினங்கள்

கணக்கு தலைப்பு எண்: (2105/1) திடக்கழிவு மேலாண்மை பராமரிப்புப் பணிகள்- மனித ஆற்றல் உள்பட கணக்கு தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்படவுள்ள தொகையிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ5/182/2019(மையம்)**

**தீர்மானம் எண்.45 (பொருள்–6 ) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 7**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை, குடிநீர் விநியோகம், புதை வடிகால் பராமரிப்பு, கழிப்பிட நச்சு தொட்டிகள் பராமரிப்பு, தெருவிளக்குகள் பராமரிப்பு மற்றும் ஆய்வுப் பணிகள் ஆகிய பொது மக்களுக்கான அன்றாட பணிகளுக்காக கனரக, இலகுரக மற்றும் இயந்திர வகையைச் சேர்ந்த 293 வாகனங்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

தற்பொழுது இம்மாநகராட்சியில் 293 வாகனங்கள் பயன்பாட்டில் இருந்து வருகிற போதிலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.நி.4) துறையின் 2.2.2007ம் தேதிய அரசாணை(பத்தாண்டு) எண்.41ல் அணைத்து மாநகராட்சி பணியாளர்களுக்கான சம்பளம் மற்றும் ஒய்வூதியம் குறித்த செலவினம், அம்மாநகராட்சியின் மொத்த வருவாயில் 49%க்கு மிகாமல் இருக்க வேண்டும் என ஆணை இடப்பட்டிருப்பதால் இம்மாநகராட்சியில் அனுமதி பெறப்பட்ட ஒட்டுநர் பணியிடங்களில் 46 ஒட்டுநர் பணியிடங்கள் காலியாக இருப்பினும் புதியதாக ஒட்டுநர்கள் தேர்வு செய்ய இயலவில்லை.

ஆணையர் அவர்களின் அறிவுரையின்படி இம்மாநகராட்சியில் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள சாலைகள், பேருந்து செல்லும் பிரதான சாலைகள், காய்கறி சந்தைகள், உணவகங்கள் மற்றும் ஹோட்டல்கள் போன்ற பகுதிகளில் உருவாகும் கழிவுகளை பொது மக்களுக்கு இடையூறின்றி சேகரித்து அப்புறப்படுத்த இரவு நேரத்தில் பணிகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படும் வாகனங்களை இயக்குவதற்கு 15 ஓட்டுநர்கள் தேவைப்படுகிறார்கள்.

எனவே, இரவு நேரம் மற்றும் அதிகாலை நேரத்தில் மாநகரின் பிரதான சாலைகள், சந்தைகள் மற்றும் வணிக வளாகங்கள் அதிகம் உள்ள பகுதிகளை பொது சுகாதாரத்துடன் கூடிய தூய்மையான மாநகரமாக பராமரிக்க மேற்கண்டவாறு துப்புரவுப் பணிகளை மேற்கொள்வதற்கு தனியார் நிறுவனம் மூலம் 15 ஒப்பந்த ஒட்டுநர்களை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் உத்தரவு RC J3/7525/2018 நாள்:23.10.2018ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் 01.04.2019 முதல் 31.03.2020 வரை 366 நாட்களுக்கு பணியமர்த்திட உத்தேச மதிப்பீடு ரூ.30.96 லட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :-</u>**

1. இம்மாநகராட்சியில் இரவு நேரத்தில் மற்றும் அதிகாலை நேரத்தில் பொது மக்களுக்கு இடையூறின்றி சேகரித்து அப்புறப்படுத்த திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களை இயக்குவதற்கு 15 ஓட்டுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்திட ஆகும் மதிப்பீடு ரூ. 30.96 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை 2019–20ம் ஆண்டு வரவு மற்றும் செலவினங்கள் கணக்கு தலைப்பு எண்: (2105/1) திடக்கழிவு மேலாண்மை பராமரிப்புப் பணிகள்- மனித ஆற்றல் உள்பட கணக்கு தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்படவுள்ள தொகையிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்

**(இ5/546/2019(மையம்))**

**தீர்மானம் எண்.46 (பொருள்–7 ) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள். 8

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பல்வேறு தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியினை மேலும் தீவிரப்படுத்தும் விதமாக பொன்மலை கோட்டத்திற்குட்பட்ட பொது இடங்களில் மற்றும் சாலைகளில் பொதுமக்களால் வீசப்படும் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தற்காலிக குப்பை பொறுக்கும் துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு சேகரம் செய்து மக்கும் குப்பைகளை உரமாகவும் மக்காத குப்பைகளை மறு சுழற்சிக்கும் உபயோகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பணியினை மேற்கொள்ள இம்மாநகராட்சி நிரந்தர துப்புரவுப் பணியாளர்களை உபயோகப்படுத்தும் பட்சத்தில் ஏற்படும் ஒரு மாத ஊதிய செலவீனம் கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ எண் | விவரம் | ஒரு மாத செலவினம் | 5 மாத செலவினம் |
|---|---|---|---|
| 1 | துப்புரவுப் பணியாளர்களுக்கான ஒருமாத ஊதியம் (ஒரு மாத மொத்த ஊதியம் ரூ.17965 x 50 பணியாளர்கள்) | ரூ. 884750/- | ரூ.4423750/– |
| 2 | பணியாளர்களுக்கான ஈட்டிய விடுப்பு ஊதியம் (ஒரு பணியாளருக்கு ரூ.8742/– x 50 பணியாளர்கள்) | ரூ. 437100/– | ரூ.437100/– |
| **மொத்தம்** | | **ரூ.1321850/–** | **ரூ.4860850/–** |

மேற்கண்ட பணியினை மேற்கொள்ள சுய உதவிக் குழு பணியாளர்களை உபயோகப்படுத்தும் பட்சத்தில் ஏற்படும் ஒரு மாத ஊதிய செலவீனம் கீழ்கண்டுள்ளவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ எண் | செலவுகள் விவரம் | ஒரு மாத செலவினம் | 5 மாத செலவினம் |
|---|---|---|---|
| 1 | 50 சுய உதவிக் குழு பணியாளர்களுக்கான மாத ஊதியம் (ஒரு நாள் ஊதியம் ரூ.295 + நிர்வாக பங்குத்தொகை ரூ.39 = 334/–) (295X13.36%=39) (334X50X30) | ரூ.501000/– | ரூ. 2505000/– |
| **மொத்தம்** | | **ரூ.501000/–** | **ரூ.2505000/–** |

மேற்கண்டவாறு நவம்பர் 2017 முதல் மார்ச் 2018 வரை 5 மாதங்களுக்கு இப்பணியினை மேற்கொள்ள இம்மாநகராட்சி நிரந்தர துப்புரவுப் பணியாளர்களை ஈடுபடுத்தாமல், சுய உதவிக் குழுக்களாலோ அல்லது தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலமாக பெறப்படும் மனித ஆற்றல்கள் பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் இம்மாநகராட்சிக்கு சேமிப்பு ஏற்படுவதுடன் விஞ்ஞான முறையில் திடக்கழிவு மேலாண்மை விதிகளை நிறைவு செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு இயற்கை உரம் தயாரிப்பு செய்யப்படுவதுடன் மறு சுழற்சி செய்யக் கூடிய கழிவுகள் மறு சுழற்சி செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியினை முல்லை மற்றும் ரோஜா சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினசரி ஊதிய செயல்முறை ந.க. எண் RC.J3/8631/2017 நாள் 29.08.2017 படி ஒரு பணியாளருக்கு தினசரி ஊதியம் ரூ.295/– மற்றும் EPF நிர்வாகப் பங்குத் தொகை ரூ.39/– மொத்தம் ரூ.334/–ன் படி 50 பணியாளர்களுக்கு 5 மாத உத்தேச ஊதியம் ரூ.25,05,000/–ல் மேற்கொள்ள அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களிடம் 25.10.2017 முன் அனுமதி பெறப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டது.

அதன்படி நவம்பர் 2017 முதல் மார்ச் 2018 வரை 5 மாதங்களுக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டமைக்கு கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு ஊதியம் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ எண் | மனித வருகை நாட்கள் | மொத்த ஊதியம் (நாள் ஒன்றுக்கு ரூ295/– வீதம்) | சுய உதவிக் குழுக்கள் மூலம் நியமிக்கப்பட்ட துப்புரவு மனித ஆற்றல்களுக்கு பிடிதம் செய்யப்பட வேண்டிய EPF நிர்வாகப் பங்குத் தொகை 13.36% (நபர் ஒன்றுக்கு ரூ.39) | மொத்த செலவினம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 (3+4) |
| 1 | 7057 | 2081815 | 278130 | 2359945 |

மேற்கண்ட அட்டவணைப்படி மொத்த செலவினத்திம் ரூ.23,57,038/—க்கு தனி அலுவலர் அவர்களின் மன்ற அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதியினை பெற்று 25.10.2018ம் தேதிய வேலை உத்தரவின் படி நவம்பர் 2017 முதல் மார்ச் 2018 வரை பணி மேற்கொண்டமைக்கு தனி அலுவலர் பின்னேற்பு வழங்கலாம்.
2. மேற்கண்ட பணி மேற்கொண்டமைக்கான செலவினம் ரூ.23,57,038/—க்கு தனி அலுவலர் ஒப்புதல் வழங்கலாம்.
3. திடக்கழிவு மேலாண்மை பராமரிப்பு பணிகள் மனித ஆற்றல் உட்பட என்ற திட்ட செலவு கணக்கு திட்ட தலைப்பு எண் 2105/1ன் கீழ் மேற்கொள்ள தனி அலுவலர் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.எச்1/7735/2017(பொன்)**

**தீர்மானம் எண்.47 (பொருள்—8 ) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 9**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ,அபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளில் தினசரி வீடு வீடாக சென்று LMV வாகனத்தின் மூலம் திடக்கழிவுகள் தரம் பிரித்து பெறப்பட்டு நுண் உரம் செயலாக்க மையத்திற்கு எடுத்து செல்லப்படும் மக்கும் குப்பைகளை மேற்கண்ட நுண் உரம் செயலாக்க மையத்தில் உரமாக்க அரைத்து தொட்டியில் இட்டும் மற்றும் பிளாஸ்டிக் மற்றும் இதர பொருட்களை சேகரித்து மறுசுழற்சி செய்ய விற்பனை செய்து துப்புரவு பணியாளர்களுக்கே ஊக்க தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

இதர மறுசுழற்சி செய்ய இயலாத Inert waste சேகரிக்கப்பட்டு Ultra Tech சிமெண்ட் தொழிற்சாலையுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படுகிறது.

மேற்கண்ட பணிக்கு அந்தந்த பகுதியில் அமைந்துள்ள சுய உதவி குழுக்கள் மூலம் துப்புரவு பணியார்கள் (Sanitary Workers) பணியில் அமர்த்தப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பல்வேறு நிலையில் உள்ள அலுவலர்கள் ஆய்வின்போது வீடுதோறும் திடக்கழிவுகள் துப்புரவு பணியாளர்களால் வாகனங்களில் சென்று பெறப்பட்டு வரும் நிலையிலும் சாலை ஓரங்களிலும் மற்றும் காலிமனைகளிலும் திடக்கழிவுகள் காணப்படும் நிலையில் உள்ளது. இது பொதுமக்களுக்கும் பொது சுகாதாரத்திற்க்கும் பாதிப்பை ஏற்படுத்தும் நிலையில் உள்ளது. இதனால் சுய உதவி குழுக்கள் மூலம் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்கள் திறம்பட பணி மேற்கொள்ளாததையே இது சுட்டிக் காட்டுகிறது.

எனவே, கோ.அபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட நுண் உரம் செயலாக்க மையம் மற்றும் வாகனத்திற்கு தேவையான துப்புரவு பணியார்களை தனியார் நிறுவனத்தின் மூலம் (Out Sourcing) ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்திகொள்ள கீழ்கண்ட அட்டவணையில் கண்டவாறு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. **நுண் உரம் செயலாக்க மையத்தின் விவரம்**

| வ. எண் | வார்டு எண் | நுண் உரம் செயலாக்க மையத்தின் அமைவிடம் | வீடுகளின் எண்ணிக்கை | மக்கள் தொகை | வாகன எண்ணிக்கை (Tata Ace) | வாகன பணியாளர்கள் | நுண் உரம் செயலாக்க மையத்தில் குப்பை தரம் பிரித்து மற்றும் மக்கும் குப்பையினை இயந்திரம் மூலம் அரைத்து தொட்டியிட பணியாளர்கள் தேவையான எண்ணிக்கை | தேவையான மொத்த பணியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 40,41,45 | கருமண்டபம் | 21019 | 66614 | 11 | 22 | 6 | 28 |
| 2 | 49,50, | குழுமிக்கரை | 8968 | 38209 | 6 | 12 | 6 | 18 |
| 3 | 51, 54 | கல்லாங்காடு | 7304 | 26671 | 5 | 10 | 6 | 16 |
| 4 | 52, 53 | வயலூர் மெயின் ரோடு | 12770 | 44275 | 8 | 16 | 6 | 22 |
| 5 | 55, 56 | வாமடம் | 10849 | 27994 | 6 | 12 | 6 | 18 |
| 6 | 57,58 | கோணக்கரை | 9539 | 35354 | 7 | 14 | 6 | 20 |
| 7 | 59,60 | பனிக்கன் தெரு | 8203 | 30358 | 6 | 12 | 6 | 18 |
| மொத்தம் | | | 78652 | 269475 | 49 | 98 | 42 | 140 |

மேற்கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ளவாறு கோ.அபிஷேகபுரம் கோட்டத்திற்கு உரிய துப்புரவு பணியாளர்கள் 140 நபரை நான்கு மாத காலத்திற்கு தனியார் நிறுவனத்தின் மூலம் பெற தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.79.15 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்க கோரி தனி அலுவலர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கும், பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

கோ.அபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட நுண் உரம் செயலாக்க மையம் மற்றும் வாகனத்திற்கு தேவையான 140 துப்புரவு பணியார்களை தனியார் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.79.15 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கலாம்.

**(சி4/1122/19(கோ.அபி)**

**தீர்மானம் எண்.48 (பொருள்– 9 ) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 10**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் விடுப்பட்ட பகுதிகளுக்கு (Phase III) அடல் மிஷன் புணரமைப்பு மற்றும் நகர்ப்புற மாற்றம் திட்டத்தின் (AMRUT) திட்ட நெறிமுறைகளின் படி, தமிழ்நாடு நகர்ப்புற உள் கட்டமைப்பு மற்றும் நிதி சேவைகள் கழகம் சென்னை மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதிஉதவியுடன் ரூ.312.14 கோடி திட்ட மதிப்பீட்டில் புதைவடிகால் திட்டம் செயல்படுத்த அரசாணை எண்.05 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.22.01.2017 ஒப்புதல் அளித்துள்ளதின் பேரில், மேற்படி திட்டப்பணிக்கு முதன்மைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் கடிதம் எண்.18281/2018/DO2 நாள் 28.05.2018ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண், 68/ 2018–19.ன் வாயிலாக தேசிய அளவிலான (National Bidding), அகில இந்திய அளவில் முதன்முறையாக 27.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, நிர்வாக காரணங்களால் 07.09.2018 அன்று காலநீட்டிப்பு செய்து, பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | பகுதி | பணியின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள தொகை ரூ லட்சத்தில் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் |
|---|---|---|---|---|
| 1 | 3 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளில் புதைவடிகால் திட்டம் செயல்படுத்துதல் – தொகுப்பு 3 ( வார்டு முழுவதும், 37,39, 40,41 வார்டு பகுதி மட்டும் 31,32,35,36,38,42,43,45,52,53,60,63 ) | 27810.28 | மெசர்ஸ்.சிம்ஃப்ளக்ஸ் இன்ஃப்ராஸ்ட்க்ஸர்ஸ் லிமிடெட், கொல்கத்தா |

மேற்குறிப்பிட்டுள்ள நிறுவனம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளிக் கட்டுப்பாட்டின் படி முதலில் தொழில்நுட்பத் தகுதி உறை பிரிக்கப்பட்டது. மேற்படி பகுதி 3ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்பத் தகுதிக்கான சான்றிதழ்கள் அனைத்தும் மதிப்பாய்வு செய்யப்பட்டு, மதிப்பாய்வு அறிக்கைகள் அனைத்தும் தொழில் நுட்ப நிலைக் குழு, நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. 14.09.2018அன்று நடைபெற்ற தொழில் நுட்ப நிலைக்குழு கூட்ட நடவடிக்கை குறிப்பில் ஆசிய வளர்ச்சி வங்கியின் தடையின்மை சான்று பெற்ற பின் மேற்கண்ட நிறுவனத்தின் விலைப்புள்ளிகளை திறக்க பரிந்துரை செய்துள்ளது. அதன்பின் இயக்குநர், ஆசிய வளர்ச்சி வங்கி, நியுடெல்லி 20.11.2018ம் நாளைய மின்னஞ்சல் கடிதத்தில் மெசர்ஸ். சிம்ஃப்ளக்ஸ் இன்ஃப்ராஸ்ட்க்ஸர்ஸ் லிமிடெட், கொல்கத்தா நிறுவனத்தின் விலைப்புள்ளியினை திறக்கலாம் பரிந்துரை செய்தது. இதனைத் தொடர்ந்து, 30.11.2018ம் தேதி ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவால் விலைப்புள்ளி பிரிக்கப்பட்டு, அதற்கான மதிப்பாய்வினை மதிப்பீடு விலையுடன் ஒப்பிட்டு ஒப்புநோக்கு படிவம் தயாரிக்க்ப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு,

| வ. எண் | தொகுப்பு எண். | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள தொகை ரூ லட்சத்தில | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத் தொகை (2017–18ம் ஆண்டின் பொதுப்பணித் துறை / 2017–18ம் ஆண்டின் த.கு.வ. வாரியத்தின் தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணை படி தயாரிக்கப்பட்டது (ரூபாயில்) | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத் தொகை (2018–19ம் ஆண்டின் பொதுப்பணித்துறை / 2018–19ம் ஆண்டின் த.கு.வ. வாரியத்தின் தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணை படி தயாரிக்கப்பட்டது (ரூபாயில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாயில்) | மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத் தொகை (2017–18ம் ஆண்டின் பொதுப்பணித் துறை / 2017–18ம் ஆண்டின் த.கு.வ. வாரியத்தின் தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணை படி தயாரிக்கப்பட்டது (ரூபாயில்) | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத் தொகை (2018–19ம் ஆண்டின் பொதுப்பணித் துறை / 2018–19ம் ஆண்டின் த.கு.வ. வாரியத்தின் தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணை படி தயாரிக்கப் பட்டது (ரூபாயில்) |
| 1 | 1 | 27810.28 | 276,89,69,494.52 | 291,38,23,944.66 | மெசர்ஸ். சிம்ஃப்ளக்ஸ் இன்ஃப்ராஸ்ட்க்ஸர்ஸ் லிமிடெட், கொல்கத்தா | 389,57,56,907.26 | 40.69 % அதிகம் | 33.70 % அதிகம் |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி தொகுப்பு எண்.1க்கு மெசர்ஸ். சிம்ஃப்ளக்ஸ் இன்ஃப்ராஸ்ட்க்ஸர்ஸ் லிமிடெட், கொல்கத்தா நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் **40.69** சதவிதம் (SOR 2017-18) கூடுதலாக கொடுத்துள்ளதை குறைத்து தரக் கோரி **18.01.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதில், மேற்படி நிறுவனம் **31.01.2019** அன்று ரூ.369,31,77,548.08 குறைத்து தர சம்மதம் தெரிவித்துள்ளது அதன் விவரம் பின்வருமாறு

| வ. எண் | தொகுப்பு எண். | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள தொகை ரூ லட்சத்தில | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத் தொகை (2017–18ம் ஆண்டின் பொதுப்பணித் துறை / 2017–18ம் ஆண்டின் த.கு.வ. வாரியத்தின் தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணை படி தயாரிக்கப்பட்டது (ரூபாயில்) | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத் தொகை (2018–19ம் ஆண்டின் பொதுப்பணித் துறை / 2018–19ம் ஆண்டின் த.கு.வ. வாரியத்தின் தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணை படி தயாரிக்கப்பட்டது (ரூபாயில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாயில்) | மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத் தொகை (2017–18ம் ஆண்டின் பொதுப்பணித் துறை / 2017–18ம் ஆண்டின் த.கு.வ. வாரியத்தின் தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணை படி தயாரிக்கப்பட்டது (ரூபாயில்) | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத் தொகை (2018–19ம் ஆண்டின் பொதுப்பணித் துறை / 2018–19ம் ஆண்டின் த.கு.வ. வாரியத்தின் தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணை படி தயாரிக்கப்பட்டது (ரூபாயில்) |
| 1 | 1 | 27810.28 | 276,89,69,494.52 | 291,38,23,944.66 | மெசர்ஸ். சிம்ஃப்ளக்ஸ் இன்ஃப்ராஸ்ட்க்ஸர்ஸ் லிமிடெட், கொல்கத்தா | 369,31,77,548.08 | 33.38 % அதிகம் | 26.75 % அதிகம் |

இதனைத் தொடர்ந்து, மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு மெசர்ஸ். சிம்ஃப்ளக்ஸ் இன்ஃப்ராஸ்ட்க்ஸர்ஸ் லிமிடெட், கொல்கத்தா நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் 10 சதவீதத்திற்கு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால், இதற்கான ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் குழு (Tender Award Committee) நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னைக்கு அனுப்பி வைக்கவும், ஒப்பபுந்தப்புள்ளி ஒப்புதல் குழு முடிவு செய்யும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பை ஏற்று மேல் நடவடிக்கை தொடரவும் அனுமதி கோரி தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. ஒப்புதல் அளிக்கலாம்
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மெசர்ஸ். சிம்ஃப்ளக்ஸ் இன்ஃப்ராஸ்ட்க்ஸர்ஸ் லிமிடெட், கொல்கத்தா நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி (+33.38 % ) மதிப்பீட்டைக்காட்டிலும் 5 சதவீதத்திற்கு கூடுதலாக உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் குழு (Tender Award Committee) நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைத்து மேல் நடவடிக்கை தொடர அனுமதி அளிக்கலாம்.

**(இ7/4824/2019/மையம்)**

**தீர்மானம் எண்.49 (பொருள்– 10 ) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள். 11

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் மொத்த பணிகளையும் கணினி மயமாக்க ஆணையிடப்பட்டதனை அடுத்து கணினி தொடர்பான பணிகளை மேற்கொள்ள தனியாக பணியிடங்கள் ஏதும் இது நாள் வரை தோற்றுவிக்கப்படாத நிலையில் நான்கு வார்டு அலுவலகங்கள் மற்றும் மைய அலுவலகத்தில் கணினி தொடர்பான பணிகள் யாவும் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணியாளர்களுக்கு 31.03.2008 முடிய ரூ.3,000/– மாத தொகுப்பூதியத்திலும், மாமன்றத் தீர்மானம் எண் 31, நாள் 27.02.2009ல், 01.04.2008 முதல் மாதத் தொகுப்பூதியம் ரூ.4,000/– என்ற அடிப்படையிலும், அதனை தொடர்ந்து மாமன்ற தீர்மானம் எண் 50 நாள். 31.03.2010 ல் 01.04.2010 முதல் மாதத் தொகுப்பூதியம் ரூ.5,000/– என்ற அடிப்படையிலும், மாமன்ற தீர்மானம் எண் 87 நாள். 25.11.2011ல் 01.04.2011 முதல் மாதத் தொகுப்பூதியம் ரூ.6,000/– என்ற அடிப்படையிலும் மற்றும் தனி அலுவலர் தீர்மானம் எண் 232 நாள் 15.12.2016ன்படி 1.8.2016 முதல் மாதத் தொகுப்பூதியம் ரூ.9,500/– என்ற அடிப்படையிலும் வழங்கப்பட்டும் இறுதியாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 2017–2018ம் ஆண்டிற்கு தினசரி கூலிக்கான பட்டியலில் தெரிவிக்கப்பட்ட தினக்கூலி ரூ.364/– ன் அடிப்படையில் 01.04.2017 முதல் ரூ.10,500/– ஐ மாத தொகுப்பூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், மேற்கண்ட தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வரும் புள்ளி விவர தொகுப்பாளர்களின் 31.01.2018ந் தேதிய விண்ணப்பத்தில் தற்போது தங்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாத தொகுப்பூதியமான ரூ.10,500/–ஐ அரசாணை எண் (2டி) 62, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத்துறை நாள்.11.10.2017ன் அடிப்படையில் உயர்த்தி வழங்க ஆவண செய்யுமாறு கோரியுள்ளனர்.

இது தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 23815/2018/மாந அ1, நாள்.03.12.2018ல் மேற்கண்ட புள்ளி விவரத்தொகுப்பாளர்களுக்கு அரசாணை எண்.62ன் படி மாத தொகுப்பூதியம் வழங்குவது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.13920/18/ஜே2 நாள்27.06.2018ன் அறிவுறுத்தலினை பின்பற்றுமாறு தெரிவிக்கப்பட்டது.

இதுசம்பந்தமாக, மேற்கண்ட அரசாணையின்படி மாதம் வழங்கப்படவேண்டிய தொகுப்பூதியம் மற்றும் அகவிலைப்படி ஆகிய பணப்பலன்களை வழங்கிட கோரிய கோரிக்கை தொடர்பாக திரு.எஸ்.சாஜி பினோ, மாநகராட்சி வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை அவர்களின் சட்டக்கருத்து வழங்கக் கோரி பெறப்பட்ட 13.12.2018ந் தேதிய கடிதத்தில் மேற்கண்ட அரசாணையின் படி மேற்கண்ட தொகுப்பூதிய புள்ளி விவரத் தொகுப்பாளர்களின் பிரிவு Semi skilled Grade II, Entry 7ல் வருவதாகவும்,

அதன் படி ரூ.14,000/- தொகுப்பூதியம் வழங்கலாம் எனவும், மேற்கண்ட பணியாளர்களால் சென்னை உயர்நீதி மன்ற மதுரையில் தொடரப்பட்டுள்ள வழக்கு அவர்களின் பணியினை வரன்முறைப்படுத்தக் கோரப்பட்ட கோரிக்கை எனவும், மேற்கண்ட அரசாணை குறைந்த பட்ச ஊதியச் சட்டம் 1948ன் கீழ் பிறப்பிக்கப்பட்டதாகும் எனவே, மேற்கண்ட பணியாளர்களுக்கு ரூ.14,000/- தொகுப்பூதியம் வழங்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இது தொடர்பாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களின் 19.12.2018ந் தேதிய கடித ந.க.எண்.963/த1/2018ல் மேற்கண்ட புள்ளி விவரத் தொகுப்பாளர்களுக்கு தொகுப்பூதியம் வழங்குவது சம்பந்தமாக மேற்கண்ட அரசாணை மற்றும் பிற்சேர்க்கை (Schedule -1) மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் சொல்லப்பட்டுள்ள அறிவுறுத்தல் ஆகியவற்றுடன் மாநகராட்சி மன்றத் தீர்மானம் பெற்று அரசாணையினை நடைமுறைப்படுத்த நிர்வாக ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மாநகராட்சி வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை அவர்களின் சட்டக்கருத்து மற்றும் துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களின் தெளிவுரை ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கண்ட தற்காலிக புள்ளி விவரத் தொகுப்பாளர்களுக்கு மாத தொகுப்பூதிய தொகை ரூ.14,000/– மற்றும் அகவிலைப்படி

ரூ.3,725/- ஐ **01.01.2019** தேதி முதல் மாநகராட்சிப் பொது நிதியிலிருந்து வழங்குவது தொடர்பாக முடிவு செய்வது குறித்து தனி அலுவலர் அவர்களுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு: –**

மாநகராட்சி வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை அவர்களின் சட்டக்கருத்து மற்றும் துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களின் தெளிவுரை ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கண்ட தற்காலிக புள்ளி விவரத் தொகுப்பாளர்களுக்கு மாத தொகுப்பூதிய தொகை ரூ.**14,000/–** மற்றும் அகவிலைப்படி ரூ.3,725/-ஐ **01.01.2019** தேதி முதல் மாநகராட்சிப் பொது நிதியிலிருந்து வழங்க ஒப்புதல் வழங்கலாம்.

**(கோப்பு எண்.12648/2005/சி1(மையம்)**

**தீர்மானம் எண்.50 (பொருள்– 11) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 12**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன், அரசாணை எண்.**218**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) துறை நாள்.**28.09.2010**ல் ஒரு பேரூராட்சி மற்றும் நான்கு கிராம ஊராட்சிகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்து ஆணையிடப்பட்டது. இவ்வாறு எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பேரூராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளில் ஊதிய ஏற்ற முறையில் பணிபுரிந்து வந்த பணியாளர்களை அரசாணை எண்.**115**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**19.12.2012**ல் அரசாணையின் இணைப்பில் கண்டவாறு பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் அனுமதிக்கப்பட்ட பணியிடம் மற்றும் அப்பணியிடங்களில் பணிபுரிந்து வந்த பணியாளர்களை அதே ஊதிய விகிதத்தில் ஈர்த்துக் கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இவ்வரசாணையின் இணைப்பு IV–ல் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு வகையிலான பணியிடங்களில் தொகுப்பூதியம் அடிப்படையில் பணிபுரிந்து வந்த **53** பணியாளர்கள் மற்றும் தினக்கூலி அடிப்படையிலான **16** பணியாளர்கள் ஆக மொத்தம் **69** பணியாளர்கள் பொறுத்தமட்டில், இப்பணியாளர்கள் பிரத்யேகமான எவ்வகையான பணிவிதிகளின் கீழ் நியமனம் செய்யப்படாத காரணத்தால் இப்பணியாளர்கள் பொறுத்தமட்டில் அதே ஊதியத்தினை தொடர்ந்து வழங்கிடவும் நடைமுறை நிலைமை ( Status–Quo ) தொடர்ந்து கடைப் பிடிக்கவும் ஆணையிடப் பட்டுள்ளது.

இந்நிலையில் திரு.பி.வின்சென்ட் ஆரோக்கியதாஸ் மற்றும் **62** வால்வு ஆபரேட்டர்கள் **03.09.2018**ந் தேதிய விண்ணப்பத்தில் பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளை மாநகராட்சியுடன் ஈர்த்துக்கொள்ளப்பட்ட சமயத்தில் பெற்று வந்த அதே தினக்கூலி மற்றும் தொகுப்பூதியத்தினை பெற்றுவருவதனை அரசு ஆணை(2ப) எண்.**62**, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(ஜே1) துறை, நாள்.**11.10.2017**ஐ இணைத்து அதன் அடிப்படையில் குறைந்த பட்ச ஊதியம் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில், பேரூராட்சி மற்றும் ஊராட்சி அமைப்புகளில் பல்வேறு நிலையிலான பணியிடங்களில் தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி அடிப்படையில் அன்றைய நாளில் பணிபுரிந்து வந்த பணியாளர்களின் விபரம் கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | மாத தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி விவரம் | தொகுப்பூதிய பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | Driver | 1510/- (CP) | **01** நபர் |
| 2 | Data Entry Operator | 6244/- (D.W) | **01** நபர் |
| 3 | Electrician | 4670/- (DW) | **06** நபர்கள் |
| 4 | OHT Operator | 2040/- (C.P) | **10** நபர்கள் |
| 5 | OHT Operator | 2000/- (C.P) | **12** நபர்கள் |
| 6 | Sanitary Worker | 3000/- (DW) | **06** நபர்கள் |
| 7 | Sanitary Worker | 1510/- (C.P) | **27** நபர்கள் |
| | மொத்தம் | | **63** பணியாளர்கள் |

இதனை அடுத்து இப்பணியாளர்களை இம்மாநகராட்சியில் ஏற்கனவே உள்ள பணியிடங்களில் பூர்த்தி செய்து கொள்ளவோ அல்லது கூடுதல் தொகுப்பூதியம் வழங்கி

ஈடுபடுத்திக் கொள்வது குறித்து அரசுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக விரிவான கருத்துருக்கள் இவ்வலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டதனை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.8248/13/மாந.அ2, நாள்06.05.2015ல் அரசுக்கு உரிய பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும் இப்பொருள் மீது எவ்வித இறுதி ஆணையும் அரசிடமிருந்து பிறப்பிக்கப்படாமல் நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் மேற்கண்டவாறு தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் தங்களுக்கு தற்போது வழங்கப்படும் தொகுப்பூதியம் / தினக்கூலியினை கொண்டு வாழ்க்கை நடத்த இயலவில்லை என்றும் தற்போதைய விலை ஏற்றம் மற்றும் பொருளாதார சூழ்நிலையினைக் கருத்தில் கொண்டு தங்களின் ஊதியத்தினை அதிகப்படுத்தி வழங்கிட தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 16.05.2018ந் தேதிய கடித ந.க.எண்.13920/2018/ஜே2ல் மாநகராட்சி / நகராட்சிகளில் குறைந்த அளவு ஊதியம் பெறுவோர் எவரேனும் இருப்பின் அவர்களுக்கு அரசு ஆணை(2ப) எண்.62, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(ஜே1) துறை, நாள்.11.10.2017ன் படி ஊதியம் வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்குமாறும், இப்பொருள் குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரத்தினை நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைக்கவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் இப்பணியாளர்கள் பொருத்த மட்டில் இவர்களது நிலையினை அதே நிலையில் தொடர ஆணையிடப்பட்ட அரசாணை, அரசு ஆணை(2ப) எண்.62, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(ஜே1) துறை, நாள்.11.10.2017 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 16.05.2018ந் தேதிய கடிதம் உள்ளிட்டவைகள் பரிசீலனை செய்யப்பட்டது.

இதன்படி முந்தைய ஊராட்சிகளில் பல்வேறு நிலைகளில் தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்ட பணியாளர்கள் ஒரு சிலர் பகுதி நேர பணிகளை மேற்கொள்ளும் வகையில் ஈடுபடுத்தப்பட்டவர்கள் ஆவர். இது தொடர்பாக உதவி ஆணையர், அரியமங்கலம் கோட்டம், அவர்களின் 02.01.2019ந் தேதிய அறிக்கை மற்றும் உதவி ஆணையர், பொன்மலைக் கோட்டம் அவர்களின் 08.01.2019ந் தேதிய அறிக்கையில் முழு அளவிலான கோட்ட அலுவலகங்களின் செயல்பாடுகளுக்கு நிர்வாக ரீதியான காரணங்களினால் பணியாளர்களில் பற்றாக்குறை மற்றும் வேலையின் தன்மையினை பொறுத்து இப்பணியாளர்கள் அனைவரும் முழு நேரப்பணியாளர்களாகவே ஈடுபடுத்தப்பட்டு இம்மாநகராட்சியின் பல்வேறு பணிகளை தற்போது மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இவர்களுக்கு மேற்கண்ட அரசாணையின் படி கீழ்காணும் பதவிகளுக்கு அவர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஊதியம் மற்றும் அகவிலைப்படியும் தகுதியுடையதாகும்.

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | தற்போது பெற்று வரும் மாத தொகுப்பூதியம் / தினக்கூலி விபரம் | பணியாளர் களின் எண்ணிக்கை | தற்போது அரசு ஆணை(2ப) எண்.62, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(ஜே1) துறை, நாள்.11.10.2017ன் படி நிர்ணயம் செய்யப்பட வேண்டிய ஊதியம் மற்றும் அகவிலைப்படி |
|---|---|---|---|---|
| 1 | Driver | 1510/- (CP) | 01 நபர்கள் | ரூ.14000 + 3725/- |
| 2 | Data Entry Operator | 6244/- (D.W) | 01 நபர்கள் | ரூ.14000 + 3725/- |
| 3 | Electrician | 4670/- (DW) | 06 நபர்கள் | ரூ.13000 + 3725/- |
| 4 | OHT Operator | 2040/- (C.P) | 10 நபர்கள் | ரூ.13000 + 3725/- |
| 5 | OHT Operator | 2000/- (C.P) | 12 நபர்கள் | ரூ.13000 + 3725/- |
| 6 | Sanitary Worker | 3000/- (DW) | 06 நபர்கள் | ரூ.13000 + 3725/- |
| 7 | Sanitary Worker | 1510/- (C.P) | 27 நபர்கள் | ரூ.13000 + 3725/- |
| மொத்தம் | | | 63 நபர்கள் | |

ஏற்கனவே பணிபுரிந்து வந்த 63 பணியாளர்களில் தற்போது 47 பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். அப்பணியாளர்களின் பெயர், பதவி, பணி நியமனம் செய்யப்பட்ட நாள், தற்போது பெற்று வரும் ஊதியம் மற்றும் தற்போது அரசு ஆணை எண்.62ன் படி நிர்ணயம் செய்யப்பட்டால் எழும் ஊதியப் பட்டியல் கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | பெயர் திருவாளர்குலூ | பதவி | நியமனம் செய்யப்பட்ட நாள் | பெற்று வரும் ஊதிய விவரம் | அரசு ஆணை(2ப) எண்.62, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு(ஜே1) துறை, நாள்.11.10.2017ன் படி நிர்ணயம் செய்யப்பட வேண்டிய ஊதியம் மற்றும் அகவிலைப்படி |
|---|---|---|---|---|---|
| 1 | 3 | 4 | 7 | 8 | |
| 1 | ஆர்.செந்தில்குமார் | ஓட்டுநர் | 06.02.2006 | மாத தொகுப்பூதியம் ரூ.1510/– | ரூ.14000 + 3725/- |
| 2 | கே.சத்தியபிரியா | கணினி புள்ளி விவர தொகுப்பாளர் | 01.09.2006 | தினக்கூலி ஊதியம் நாள்.1க்கு ரூ.223/– | ரூ.14000 + 3725/- |
| 3 | ஜி.சுகுமார் | மின் பணியாளர் | 20.03.2009 | ஒரு மின் விளக்கிற்கு ரூ.20/– | ரூ.13000 + 3725/- |
| 4 | ஜி.சவுரிமுத்து | மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குபவர் | 14.12.1991 | மாத தொகுப்பூதியம் ரூ.2040/– | ரூ.13000 + 3725/- |
| 5 | பி.வின்செண்ட் ஆரோக்கிய தாஸ் | | 07.09.1992 | | ரூ.13000 + 3725/- |
| 6 | எஸ்.சுப்பிரமணியன் | | 14.12.1991 | | ரூ.13000 + 3725/- |
| 7 | எஸ்.அண்ணாதுரை | | 20.10.2000 | | ரூ.13000 + 3725/- |
| 8 | ஜெ. ராபர்ட் | | 31.11.1998 | | ரூ.13000 + 3725/- |
| 9 | வி.கண்ணாயிரம் | | 03.11.1998 | | ரூ.13000 + 3725/- |
| 10 | எஸ்.பழனிவேல் | | 13.03.2001 | | ரூ.13000 + 3725/- |
| 11 | அ.மணிமாறன் | மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குபவர் | 01.06.2010 | மாத தொகுப்பூதியம் ரூ.2000/– | ரூ.13000 + 3725/- |
| 12 | என்.ரமேஷ் | | 10.01.2008 | | ரூ.13000 + 3725/- |
| 13 | என்.எழில்அரசன் | | 01.03.1996 | | ரூ.13000 + 3725/- |
| 14 | வி.லெட்சுமி | | 01.03.1996 | | ரூ.13000 + 3725/- |
| 15 | எஸ்.குமார் | | 20.07.2009 | | ரூ.13000 + 3725/- |
| 16 | வி.நாகராஜன் | | 06.05.1992 | | ரூ.13000 + 3725/- |
| 17 | டி.மேனகா | | 06.05.1992 | | ரூ.13000 + 3725/- |
| 18 | கே.சதீஸ்குமார் | | 14.03.2006 | | ரூ.13000 + 3725/- |
| 19 | வி.ஜெய்கணேஷ் | | 22.03.2004 | | ரூ.13000 + 3725/- |
| 20 | என்.கதிரவன் | | 14.03.2004 | | ரூ.13000 + 3725/- |
| 21 | எஸ்.முத்துக்குமரன் | | 01.01.2001 | | ரூ.13000 + 3725/- |
| 22 | பி.நாகமணி | | 28.06.2010 | | ரூ.13000 + 3725/- |
| 23 | எஸ்.முத்துப்பாண்டி | துப்புரவு பணியாளர் | 28.12.2006 | தினக்கூலி ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.100/– | ரூ.13000 + 3725/- |
| 24 | எம்.சாந்தி | | 28.12.2006 | | ரூ.13000 + 3725/- |
| 25 | பி.அறிவுமணி | துப்புரவு பணியாளர் | 28.12.2006 | மாத தொகுப்பூதியம் ரூ.1510/– | ரூ.13000 + 3725/- |
| 26 | அ.சுப்பிரமணி | | 17.04.2009 | | ரூ.13000 + 3725/- |
| 27 | எல்.ஜெயலெட்சுமி | | 17.04.2009 | | ரூ.13000 + 3725/- |
| 28 | எம்.செல்வம் | | 10.01.2008 | | ரூ.13000 + 3725/- |
| 29 | அ. பழனி | துப்புரவு பணியாளர் | 23.10.1999 | மாத தொகுப்பூதியம் ரூ.1510/– | ரூ.13000 + 3725/ |
| 30 | ஜி.செல்லம்மாள் | | 17.01.1999 | | ரூ.13000 + 3725/ |
| 31 | டி.பழனியம்மாள் | | 01.02.2002 | | ரூ.13000 + 3725/- |
| 32 | எஸ்.செட்டியம்மாள் | | 14.02.1991 | | ரூ.13000 + 3725/- |
| 33 | அ.மாராயி | | 14.02.1991 | | ரூ.13000 + 3725/- |
| 34 | வி.பாப்பாத்தி | | 10.12.1996 | | ரூ.13000 + 3725/- |
| 35 | எம்.சாந்தி | | 20.10.2000 | | ரூ.13000 + 3725/- |
| 36 | எஸ்.முருகேசன் | | 11.06.1999 | | ரூ.13000 + 3725/- |
| 37 | ஆர்.ருக்குமணி | | 13.03.2002 | | ரூ.13000 + 3725/- |
| 38 | பி.காளியம்மாள் | | 25.01.2000 | | ரூ.13000 + 3725/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 39 | என்.செல்வி | | 13.02.2000 | | ரூ.13000 + 3725/- |
| 40 | வி.பொன்னம்மாள் | | 24.08.2006 | | ரூ.13000 + 3725/- |
| 41 | ஆர்.மாரியம்மாள் | | 24.08.2006 | | ரூ.13000 + 3725/- |
| 42 | ஜி.ஜானகி | | 13.03.2002 | | ரூ.13000 + 3725/- |
| 43 | கே.ரவிக்குமார் | | 14.12.1998 | | ரூ.13000 + 3725/- |
| 44 | ஆர்.ராஜீ | | 14.12.1998 | | ரூ.13000 + 3725/- |
| 45 | எஸ்.சித்ரா | | 24.08.2006 | | ரூ.13000 + 3725/- |
| 46 | பி.லெட்சுமணன் | | 09.05.1997 | | ரூ.13000 + 3725/- |
| 47 | வி.கவிதா | | 20.07.2009 | | ரூ.13000 + 3725/- |

எனவே, அரசு ஆணை(2ப) எண்.62, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(ஜே1) துறை, நாள்.11.10.2017 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 16.05.2018ந் தேதிய கடிதம் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கண்ட தற்காலிக தினக்கூலி மற்றும் தொகுப்பூதியப் பணியாளர்களுக்கு மேற்கண்ட பட்டியலில் அவரவர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள மாத தொகுப்பூதியம் மற்றும் அகவிலைப்படியினை **01.01.2019** தேதி முதல் மாநகராட்சிப் பொது நிதியிலிருந்து வழங்குவது தொடர்பாக முடிவு செய்வது குறித்து தனி அலுவலர் அவர்களுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு: –**

அரசு ஆணை(2ப) எண்.62, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(ஜே1) துறை, நாள்.11.10.2017 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 16.05.2018ந் தேதிய கடிதம் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கண்ட தற்காலிக தினக்கூலி மற்றும் தொகுப்பூதியப் பணியாளர்களுக்கு மேற்கண்ட பட்டியலில் அவரவர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள மாத தொகுப்பூதியம் மற்றும் அகவிலைப்படியினை **01.01.2019** தேதி முதல் மாநகராட்சிப் பொது நிதியிலிருந்து வழங்க ஒப்புதல் வழங்கலாம். மேலும், ஏற்கனவே இப்பணியாளர்கள் பணி ஈர்ப்பு தொடர்பாக அரசு பிறப்பிக்கும் ஆணைக்கு குந்தகமின்றி தற்காலிகமாக மேற்குறிப்பிட்டவாறு ஊதியம் நிர்ணயம் செய்யப்படலாம்.

**(கோப்பு எண்.2886/2012/சி1(மையம் )**

**தீர்மானம் எண்.51 (பொருள்– 12 ) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 13**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குப்பட்ட பகுதிகளில் பொது மக்களின் உபயோகத்திற்காக மாநகராட்சியால் பராமரிக்கப்பபட்டு வரும் 1415 எண்கள் மார்க் II கைபம்புகளுடன் கூடிய ஆழ்குழாய்க் கிணறுகள் உள்ள கைபம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடன் சரிசெய்து பொது மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படா வண்ணம் பராமரிக்க மார்க் II கைப்பம்புகளுக்கு தேவையான உதிரிபாகங்கள் மைய மண்டியில் வாங்கி வைத்து கையிருப்பில் பொருத்தப்பட்டு வருகிறது. மேற்படி கைபம்புகளுக்கு தேவையான உதிரி பாகங்கள் சில முற்றிலும் தீர்ந்த நிலையில், சில இனங்கள் மிக குறைந்த அளவிலும் உள்ளதால், கீழ்கண்டுள்ள உதிரிபாகங்களை மெசர்ஸ். டான்சி டூல் மற்றும் என்ஜினியரிங் ஒர்க்ஸ், திருச்சி நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தபுள்ளி பெறமால் நேரடியாக வாங்கி கொள்வதற்கு ஆணையர் அவர்களில் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | பொருட்களின் விபரம் | ஒன்றின் விலை ரூ. | தேவைப்படும் எண்ணிக்கை | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 32mm GI Pipe 3mtr long without coupling | 990.00 | 800Nos | 792000.00 |
| 2. | 32mm GI Coupling | 75.00 | 800 Nos | 60000.00 |
| 3. | Head with Third Plate | 2705.00 | 50 Nos | 135250.00 |
| 4. | Water tank | 1500.00 | 50 Nos | 75000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | Chain with coupling | 172.00 | 200 Nos | 34400.00 |
| 6. | Connecting Rod 3mr long | 405.00 | 800Nos | 324000.00 |
| 7. | Cylinder assembly | 2705.00 | 100Nos | 270500.00 |
| 8. | Upper valve assembly | 1135.00 | 100Nos | 113500.00 |
| 9. | Telescopic Stand | 3330.00 | 25Nos | 83250.00 |
| 10. | Bucket washer (V.T) | 30.00 | 1000Nos | 30000.00 |
| 11. | M12 X 40 flange bolt nut Units | 18.00 | 2000Nos | 36000.00 |
| 12. | Handle Assembly | 2225.00 | 50Nos | 111250.00 |
| | Total | | | 2065150.00 |
| | CGST &SGCT 12% ON Rs.2065150/- | | | 247818.00 |
| | Total | | | 2312968.00 |
| | Unforseeen items and supervisin charges | | | 7032.00 |
| | Total | | | 23,20,000.00 |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்கண்ட மதிப்பீட்டைத் தொகை ரூ.23.20 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. தமிழக அரசின் நேரடி கட்டுபாட்டில் இயங்கம் நிறுவனமான மெசர்ஸ் டான்சி டூல் மற்றும் என்ஜினியரிங் திருச்சி நிறுவனத்திடமிருந்து நேரடியாக வாங்கி கொள்ள அனுமதிக்கலாம்.
3. 2018-19 ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் குடிநீர் வடிகால் நிதியிலிருந்து 3132 கணக்கு தலைப்பில் குடிநீர் வழங்கல் கருவிகள் வாங்குவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூபாய் 250.00 இலட்சத்திலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ளலாம்.

**இ6/4380/18(மையம்)**

**தீர்மானம் எண்.52 (பொருள்– 13 ) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 14**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் மைய அலுவலக ஆவண அறையில் இருந்து 2018–19ம் ஆண்டிற்கு நான்கு கோட்ட அலுவலகங்களில் பயன்பாட்டிற்கு தேவையான படிவங்கள் அரசு அச்சகமான இயக்குநர் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, இயக்கம் அவர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் தற்போது தேவைப்படும் படிவங்களுக்கு உத்தேச மதிப்பீடு ரூ.24,17,045/– தொகையில் நேரிடையாக வாங்கிக்கொள்வதற்கும், அதற்கான செலவினத் தொகை அரசு நிறுவனமான எழுது பொருள் மற்றும் அச்சுத்துறை, இயக்கம் சென்னை அவர்களுக்கு வழங்குவதற்கும் தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், நிர்வாக அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.24,17,045/–க்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத் தொகையை 2018–2019ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் வருவாய் நிதி, செலவினங்களின் கீழ் எழுதுபொருட்கள் மற்றும் படிவங்கள் என்ற தலைப்பின் கீழ் எண்(2018) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.80.00 லட்சத்திலிருந்து ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**(சி9/4011/2018(மையம்)**

**தீர்மானம் எண்.53 (பொருள்– 14 ) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள். 15

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளில் நாள்தோறும் வீடுகளுக்கு சென்று LMV வாகனத்தின் மூலம் திடக்கழிவுகள் தரம் பிரித்து பெறப்பட்டு நுண் உயிர் உரக்கிடங்கிற்கு எடுத்து செல்லப்படும் மக்கும் குப்பையை மேற்கண்ட நுண் உயிர் உரக்கூடத்தில் உரமாக்க அரைத்து தொட்டியில் இட்டும் மற்றும் பிளாஸ்டிக் மற்றும் இதர பொருட்களை சேகரித்து மறுசுழற்சி செய்ய விற்பனை செய்து பணியாளர்களுக்கு ஊக்க தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

இதர மறுசுழற்சி செய்ய இயலாத Inert இனங்கள் சேகரிக்கப்பட்டு Ultra Tech சிமெண்ட் தொழிற்சாலையுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படுகிறது.

மேற்கண்ட பணிக்கு அந்தந்த பகுதியில் அமைந்துள்ள சுய உதவி குழுக்கள் மூலம் பணியாட்கள் (Sanitary Workers) அமர்த்தப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பல்வேறு நிலையில் உள்ள அலுவலர்கள் ஆய்வின்போது வீடுதோறும் திடக்கழிவுகள் பெற பணியாட்களுடன் வாகனங்கள் சென்றும், சாலை ஓரங்களிலும் மற்றும் காலிமனைகளிலும் திடக்கழிவுகள் காணப்படும் நிலையில் உள்ளது. இது பொதுமக்கள் மத்தியிலும் மற்றும் பத்திரிக்கை வாயிலாகவும் கேலிக்குள்ளாகும் நிலையில் உள்ளது. இது சுயஉதவி குழுக்கள் மூலம் பெறப்பட்ட பணியாட்கள் திறம்பட பணி மேற்கொள்ளாததையே காட்டுகிறது.

எனவே, ஸ்ரீரங்கம் கோட்டத்திற்குள்ள நுண் உயிர் கூடம் மற்றும் வாகனத்திற்கு தேவையான பணியாட்களை தனியார் நிறுவனத்தின் மூலம் (Out Sourcing) ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கொள்ள கீழ்கண்ட அட்டவணையில் கண்டவாறு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**1. நுண் உரம் செயலாக்க மையத்தின் விவரம்**

| வ. எண் | வார்டு எண் | நுண் உரம் செயலாக்க மையத்தின் அமைவிடம் | வீடுகளின் எண்ணிக்கை | மக்கள் தொகை | வாகன எண்ணிகை (Tata Ace) | வாகன பணியாளர்கள் | நுண் உர மையத்தில் குப்பை தரம் பிரித்து மற்றும் மக்கும் குப்பையினை இயந்திரம் மூலம் அறைத்து தொட்டியிட பணியாளர்கள் தேவையான எண்ணிக்கை | தேவையான மொத்த பணியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1, 2 | பஞ்சகரை | 9714 | 33019 | 9 | 18 | 6 | 24 |
| 2 | 3 | டிரைனேஜ் தெரு | 3781 | 13426 | 4 | 8 | 6 | 14 |
| 3 | 4, 5 & 6 | அம்பேத்கார் நகர் | 14945 | 55892 | 14 | 28 | 20 | 48 |
| 4 | 8, 11 | ஓயாமரி | 5945 | 22403 | 3 | 6 | 6 | 12 |
| 5 | 9, 10 | அய்யாளம்மன் படித்துறை | 6869 | 29119 | 4 | 8 | 6 | 14 |
| 6 | 16, 17& 18 | W.B. ரோடு | 8201 | 31641 | 6 | 12 | 6 | 28 |
| மொத்தம் | | | **49455** | **185500** | **40** | **80** | **50** | **130** |

**2. நுண் உரம் செயலாக்க மைய கட்டிடம் முடிவுறுத் நிலையில் உள்ளது.**

| வ. எண் | வார்டு எண் | நுண் உரம் செயலாக்க மையத்தின் அமைவிடம் | வீடுகளின் எண்ணிக்கை | மக்கள் தொகை | வாகன எண்ணிகை (Tata Ace ) | வாகன பணியாளர்கள் | நுண் உர மையத்தில் குப்பை தரம் பிரித்து மற்றும் மக்கும் குப்பையினை இயந்திரம் மூலம் அறைத்து தொட்டியிட பணியாளர்கள் தேவையான எண்ணிக்கை | தேவையான மொத்த பணியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| இல்லை | | | | | | | | |

**3. நுண் உரம் செயலாக்க மையம் அமைக்கப்படாத வார்டுகளின் விவரம்**

| வ. எண் | வார்டு எண் | வீடுகளின் எண்ணிக்கை | மக்கள் தொகை | வாகன எண்ணிகை (Tata Ace ) | வாகன பணியாளர்கள் | நுண் உர மையத்தில் குப்பை தரம் பிரித்து மற்றும் மக்கும் குப்பையினை இயந்திரம் மூலம் அறைத்து தொட்டியிட பணியாளர்கள் தேவையான எண்ணிக்கை | தேவையான மொத்த பணியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 12 | 5868 | 21746 | 4 | 8 | 4 | 12 |
| மொத்தம் | | 5868 | 21746 | 4 | 8 | 4 | 12 |
| மொத்தம் | | | 130 | | | | |

மேற்கண்ட அட்டவணையில் தெரிவித்தவாறு ஸ்ரீரங்கம் கோட்டத்திற்கு உரிய பணியாட்கள் 130 நபரை நான்கு மாத காலத்திற்கு தனியார் நிறுவனத்தின் மூலம் பெற தயாரிக்கப்பட்ட மதிப்பீடு 73.32 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்க கோரி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. ஸ்ரீரங்கம் கோட்டத்திற்குள்ள நுண் உயிர் கூடம் மற்றும் வாகனத்திற்கு தேவையான 130 பணியாட்களை தனியார் நிறுவனத்தின் மூலம் (Out Sourcing) ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.73.32 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கலாம்.
2. 2018—19ம் ஆண்டு வரவு செலவு திட்டம் வருவாய் நிதி தலைப்பு எண்.2105/1, திடக்கழிவு மேலாண்மை பராமரிப்பு பணிகள் – மனித ஆற்றல் உட்பட எந்த தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ரூ.700.00லட்சத்திலிருந்து பணிக்கான செலவுத் தொகையை மேற்கொள்ளலாம்.

**இ5/1038/2019/(மையம்)**

**தீர்மானம் எண்.54 (பொருள்— 15 ) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 16**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கி வரும் தலைமை நீர்ப்பணி நிலையங்களிலிருந்து, கோஅபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் உந்தப்படும் விபரங்களை கண்காணிக்க பொருத்தப்பட்டுள்ள SCADA Unit—களை 01.01.2018 முதல் 31.12.2018 வரையிலான (ஓராண்டிற்கு) இயக்கி பராமரிப்பு செய்திட மதிப்பீடு ரூ.11.35 இலட்சத்திற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி எண்.305, நாள்.28.09.2017ல் அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில், ஒப்பந்தப் புள்ளிகள் 10.10.2017—ல் பெறப்பட்டு மெசர்ஸ். ஏ.எஸ். பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி வழங்கிய குறைவான விலைப்புள்ளியினை ஏற்று, ஆணையர் அவர்களின் அனுமதி எண்.3, நாள்.31.01.2018ல்

ஒப்புதல் அளிக்கப்பட்டதன் அடிப்படையில் **01.01.2018** முதல் மேற்கண்ட நிறுவனம் கோஅபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் உந்தப்படும் விபரங்களை கண்காணிக்க பொருத்தப்பட்டுள்ள SCADA Unit–களை சீராக நல்ல முறையில் இயக்கி பராமரித்து வருகின்றது.

இவ்வாறான நிலையில் மேற்கூறப்பட்டுள்ள SCADA Unit–களை இயக்கி பராமரிக்கும் பணியானது வரும் **31.12.2018** உடன் முடிவடைந்துவிட்டதால், ஏற்கனவே தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி எண்.305, நாள்.28.09.2017ல் அனுமதிக்கப்பட்டுள்ள அலுவலக குறிப்பு வ.எண்.3ல், தேர்வு செய்யப்படும் நிறுவனம் நல்ல முறையில் பராமரிக்கும் பட்சத்தில் மேலும் கூடுதலாக 2 ஆண்டுகளுக்கு இயக்கி பராமரிப்பதற்கு ஒப்பந்ததாரருக்கு ஒவ்வொரு வருடமும், ஒப்பந்த தொகையில் 10 சதவீதம் உயர்த்தி (முதல் வருடம் நீங்கலாக) வழங்கும் தொகைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, மெசர்ஸ். ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனம் SCADA Unit–களை கடந்த ஓராண்டாக நல்ல முறையில் இயக்கி பராமரித்து வருவதால், மேலும் ஓர் ஆண்டிற்கு இயக்கி பராமரிக்க, கால நீட்டிப்பு ஆணை வழங்கிடவும், ஏற்கனவே வழங்கி வரும் மாதாந்திர ஒப்பந்த தொகை ரூ.**94,310** /–க்கு **10** சதவீதம் தொகை ரூ.**9,431**/–ஐ உயர்த்தி (**01.01.2019** முதல் **31.12.2019** வரை ஓர் ஆண்டிற்கு) மாதம் ரூ.**1,03,741**/– வீதம் **12** மாதங்களுக்கு ஏற்படும் செலவினம் ரூ.**12,44,892**/–ஐ + செலவு செய்து கொள்ளவும், தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட பணிக்கு மெசர்ஸ். ஏ.எஸ். பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனத்திற்கு மேலும் **01.01.2019** முதல் **31.12.2019** வரை ஒரு ஆண்டிற்கு கால நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.12,22,892/–க்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையினை **2018–19**ம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தில் குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் கணக்கு தலைப்பு எண்.2125ன் கீழ் ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ7/5222/2017/(மையம்)**

**தீர்மானம் எண்.55 (பொருள்– 16 ) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 17**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தமிழகத் தொல்லியல்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் கடந்த **20.12.2018**ம் தேதியன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தமிழ் வளர்ச்சி அலுவலர்களுக்கான சீராய்வுக் கூட்டத்தில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட தலைநகரில் தலைவர்கள் பெயர் சூட்டப்படாத மக்கள் பயன்பாடு அதிகமுள்ள ஏதேனும் ஒரு முதன்மைச் சாலைக்குத் **"தமிழ்ச்சாலை"** எனப்பெயர் சூட்ட முடிவு செய்யப் பட்டுள்ளதால், திருச்சிராப்பள்ளி நகரத்தில் ஏதேனும் ஒரு முதன்மைச் சாலைக்குத் **"தமிழ்ச்சாலை"** எனப்பெயர் சூட்ட ஏதுவாக விரைவில் சாலையைத் தெரிவு செய்து, தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.**427/2018**, நாள்.**29.12.2018**ம் தேதிய கடிதத்தின் வாயிலாகக் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

எனவே, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ.அபிஷேகபுரம் கோட்டம், வார்டு எண் **57**க்குட்பட்ட உறையூர் பகுதியில் அமைந்துள்ள ஏற்கெனவே **"சாலை ரோடு"** எனப் பெயரிடப்பட்டுள்ள சாலையினை **"தமிழ்ச்சாலை"** எனப் பெயர் சூட்ட, தனி அலுவலர் மன்றத்தின் அனுமதிக்குப் பொருள் வைக்கப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்படி கோ.அபிஷேகபுரம் கோட்டம், வார்டு எண் 57க்குட்பட்ட உறையூர் பகுதியில் அமைந்துள்ள ஏற்கெனவே **“சாலை ரோடு”** எனப்பெயரிடப்பட்டுள்ள சாலையினை **“தமிழ்ச்சாலை”** எனப் பெயர் சூட்ட இசைவினை வழங்கலாம்.

**(எப்1/1483/19/கோ.அபி)**

**தீர்மானம் எண்.56 (பொருள்– 17 ) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 18**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை, குடிநீர் விநியோகம், புதைவடிகால் பராமரிப்பு, கழிப்பிட நச்சு தொட்டிகள் பராமரிப்பு மற்றும் ஆய்வுப் பணிகள் ஆகிய பொது மக்களுக்கான அன்றாட பணிகளுக்கான கனரக, இலகுரக மற்றும் இயந்திர வகையைச் சேர்ந்த 293 வாகனங்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்தரவின்படி 113 ஓட்டுநர் பணியிடங்கள் அனுமதி அளிக்கப் பட்டுள்ளது.

மேற்கண்டவாறு அனுமதிக்கப்பட்ட 113 ஓட்டுநர் பணியிடங்களில் தற்பொழுது வயது முதிர்வு மற்றும் விருப்ப ஓய்வின்அடிப்படையில் சில ஓட்டுநர்கள் விடுவிக்கப்பட்டதால், தற்போது இம்மாநகராட்சியில் 67 ஓட்டுநர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். 46 ஓட்டுநர் பணியிடங்கள் காலியாக உள்ளது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.நி.4)துறையின் 2.2.2007ம் தேதிய அரசாணை (பத்தாண்டு) எண்.41ல் அனைத்து மாநகராட்சி பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஓய்வூதியம் குறித்த செலவினம், அம்மாநகராட்சியின் மொத்த வருவாயில் 49%க்கு மிகாமல் இருக்க வேண்டும் என ஆணை வழங்கப்பட்டிருப்பதால் புதிதாக ஓட்டுநர்கள் தேர்வு செய்ய இயலவில்லை.

பொது மக்களுக்காக அன்றாடம் செய்யப்பட வேண்டிய திடக்கழிவு மேலாண்மை மற்றும் குடிநீர் விநியோகப்பணிகளின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.5391/2005/எப்-3, நாள்.28.1.2005ல் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி தமிழ்நாடு முன்னாள் இராணுவத்தினர் கழகம் (TEXCO - Tamilnadu Ex-servicemen’s Corporation Limited) திருச்சி கிளையிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் கடந்த 10 வருடங்களாக ஓட்டுநர்கள் பெறப்பட்டு தற்பொழுது 5 ஓட்டுநர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். தற்பொழுது மேற்கண்ட 5 ஓட்டுநர்களையும் சேர்த்து 72 ஓட்டுநர்கள் மட்டுமே வாகனங்களை இயக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது.

திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், குடிநீர் விநியோகம், புதைவடிகால் பராமரிப்பு மற்றும் தெரு விளக்குகள் பராமரிப்பு ஆகிய அத்தியாவசிய பணிகளின் முக்கியத்துவத்தைக் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் இம்மாநகராட்சிக்கு தேவைப்படும் 41 எண்ணிக்கை ஓட்டுநர்களை 01.04.2019 முதல் 31.03.2020 வரை 366 நாட்களுக்கு மதிப்பீடு ரூ.84.63 லட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரி வெளியாட்களைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்திக் கொள்ளவும், தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. இம்மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை, குடிநீர் விநியோகம், புதைவடிகால் பராமரிப்பு, கழிப்பிட நச்சு தொட்டிகள் பராமரிப்பு மற்றும் ஆய்வுப் பணிகள் ஆகிய பொது மக்களுக்கான அன்றாட பணிகளுக்கான கனரக, இலகுரக மற்றும் இயந்திர வகையைச் சேர்ந்த வாகனங்களை இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) ஒப்பந்தப்புள்ளி கோரி 41 ஓட்டுநர்களை 01.04.2019 முதல் 31.03.2020 வரை 366 நாட்களுக்கு பணி அமர்த்திட ஆகும் மதிப்பீடு ரூ.84.63 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை 2019–20ம் ஆண்டு வரவு மற்றும் செலவினங்கள் கணக்கு தலைப்பு எண்: (2105/1) திடக்கழிவு மேலாண்மை பராமரிப்புப் பணிகள்- மனித ஆற்றல் உள்பட கணக்கு தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்படவுள்ள தொகையிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்

**இ5/545/2019(மையம்)**

**தீர்மானம் எண்.57 (பொருள்– 18 ) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) – ந. இரவிச்சந்திரன்,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையர்,**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.**